# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

25.07.2020 சனிக்கிழமை


# ஏறியது நல்லூரான் கொடி!





*யாழ்ப்பாணம், ஜூலை 25*

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களே இன்றைய கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வந்த அடியவர்கள், அடையாள அட்டை பரிசோதனை செய்தபின்னர், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டே அனுமதிக்கப்பட்டனர். இந்த நடைமுறை பெருந்திருவிழாவின்

6

## புதினம்? தெரியுமோ

மாகாண சபையில் நகமும் சதையுமா இருந்த நீதியரசரும் , சூழலியல்காரரும் இப்ப எதிரும் புதிருமா நிக்கினம். நீதியரசர் தனிக்கட்சி தொடங்கேக்க, அதில முக்கியபுள்ளியா சூழலியல் காரர் தான் இருப்பார் எண்டு கனக்கப்பேர் நம்பிச்சினம். ஆனால் அதுக்கு முதலே அந்தாள் 'பசுமை இயக்கம்' எண்ட ஒண்டைத் தொடங்கி தன் வழி தனி வழி எண்டு போகத் தொடங்கிட்டு. இப்ப இந்தத் தேர்தலில நீதியரசர் மீது 'மல்றிபரல்' தாக்குதலை நடத்தத் தொடங்கியிருக்கிறார் சூழல்காரர்.

6

# சம்பந்தனின் மிரட்டலுக்கு அஞ்ச சிங்களவர் முட்டாள்கள் அல்லர்!

## விமல் வீரவன்ஸ ஆவேசம்



**கொழும்பு, ஜூலை 25**

**"தமிழர்கள் மாதிரி சிங்களவர்களையும் முட்டாளாக்கலாம் என்று சம்பந்தன் நினைக்கின்றார். அவரின் வாய்ச்சவடால் சிங்களவர்கள் மத்தியில் எடுபடவே மாட்டாது. அவரின் மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். அவரின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி போன்றது.''**

6

## பாதுகாப்பு அதிகரிப்பு!

*கொழும்பு, ஜூலை 25*

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். தேசிய தொற்றுநோய் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர் ஒருவர்

6

## கைதிகளையும் வாக்களிக்க அனுமதிக்குக!

*மட்டக்களப்பு, ஜூலை 25*

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மறை மாவட்ட பேராயர் அதிவண. ஜோசப் பொன்னையா ஆண்டகை தேர்தல் ஆணைக் குழுத் தலைவரிடம் கோரிக்கை விடுத்

6

## புதிய ஆட்சியிலேயே அமைச்சரவை கூட்டம் கூடும்

*கொழும்பு, ஜூலை 25*

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின், அடுத்த வாரத்துக்கான அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாது என தெரியவருகின்றது. பொதுத்தேர்தலுக்கு இன்னும் 10 நாள்களே எஞ்சியுள்ள நிலையில் இறுதிக்கட்ட பிரசாரங்களில் அமைச்சர்கள் பங்கேற்கவேண்டியுள்ளதாலேயே அமைச்சரவைக்

6

## குட்டிமணி, தங்கத்துரைக்கு வவுனியாவில் அஞ்சலி

*வவுனியா,ஜூலை 25*

83 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின் போது வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களான தங்கத்துரை மற்றும் குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் நினைவுதினம் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தில் கட்சியின் முக்கியஸ்தர் விஜயகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் குட்டிமணி,

6



## யாழ்.- கொழும்பு ரயில்: இன்னும் துரிதமாகும்

*கொழும்பு, ஜூலை 25*

"யாழ்ப்பாணம் கொழும்பு ரயில்சேவையை இன்னும் விரைவுபடுத்தும் வகையில், அடுத்த ஆண்டு அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையிலான ரயில் பாதை முழுமையாக நவீனமயமாக்கப்படும்" என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

6




மிருசுவில் ஸ்ரீஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் 10 தினங்களாக நடைபெற்று, கடந்த வியாழக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெற்றது. (ரி2-159).

# கருங்குளவிக்கூடு காணப்பட்டால் அறிவிக்கவும்

சாவகச்சேரி, ஜூலை 25

கருங்குளவிக்கூடுகள் மரங்களில் இருப்பதைக்காண்போர் உடனடியாக அருகில் உள்ள சுகாதாரத் திணைக்களத்துடன் அல்லது பிரிவு கிராம அலுவலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோருடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துவதன் மூலம் கூடுகளை அழித்து மக்களைப் பாதுகாக்க முடியுமென சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இன்று காலை மீசாலை வடக்கில் மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள், அவ் வழியே வந்த சிறுமியைத் (வயது11) தாக்கியதால், தாக்குதலுக்கு இலக்கான சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி3-9)

# கொள்கலன் பெட்டி கடத்தல்; கிராம சேவகரால் முறியடிப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 25

புதுக்குடியிருப்பு இருட்டுமடுப் பகுதியில் போரின்போது கைவிடப்பட்ட கொள்கலன் பெட்டி ஒன்று இருட்டுமடுவைச் சேர்ந்த சிலரால் படையினரின் உதவியுடன் நேற்று வெள்ளிக்கிழமை கடத்த முயற்சித்தவேளை, கிராம மக்களின் எதிர்ப்பையடுத்து, கிராமசேவகரின் தலையீட்டினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணி ஒன்றில், போரின் போது கைவிடப்பட்ட மேற்படி கொள்கலன் பெட்டி பிரதேச செயலகத்தின் பதிவின் ஊடாக அரச சொத்தாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3-19)

# மன்னார் பேருந்து நிலையம்
## மக்கள் பாவனைக்காக கையளிப்பு



மன்னார், ஜூலை 25

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் இன்று காலை 8.30 மணியளவில் மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுமார் 130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த பஸ் நிலையத்தில் அரச தனியார் பேருந்து சேவைகள் வைபவ ரீதியாக இடம்பெறும் வகையில் இன்று காலை மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட்டினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தனியார் பேருந்து சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டபோதும், அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-56)

# மஞ்சளுக்கு பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் மஞ்சளுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது. கடந்த காலங்களில் அதிக விலைக்கேனும் மஞ்சளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை இருந்த போதிலும், தற்போது சந்தைகளில் மஞ்சளுக்கு தட்டுப்பாடு காணப்படுதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மஞ்சள் இறக்குமதிக்கு தடை விதித்து அரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பின்னரே மஞ்சளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.(ரி2)

# இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூலை 25

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியவற்றில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. அத்துடன் ஊவா, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளும் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். (ரி3)

# பி.சி.ஆர். பரிசோதனைக்கு 36 மில்லியன் வழங்கியது கொவிட் 19 நிதியம்

கொழும்பு, ஜூலை 25

சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு மேற்கொள்ளும் அத்தியாவசிய பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக சுகாதார, சமூக, பாதுகாப்பு நிதியத்தின் மூலம் 35,605,812.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை நேற்று மத்திய வங்கி ஆளுநரும் கொவிட் 19 சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை தலைவருமான பேராசிரியர் டப்ளியு.டி.லக்ஷ்மனால் சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. (ரி1)



# பாடசாலைகளுக்கு அருகிலுள்ள வீதி விவரங்கள் கோரல்

கொடிகாமம், ஜூலை 25

பாடசாலைக்குச் செல்லும் மற்றும் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதிகளின் விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையிடம் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது.

இது தொடர்பில் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற சபை அமர்வில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் வீதிப் போக்குவரத்துக்கு ஏற்படும் இடையூறுகளைத் தீர்க்கும் பொருட்டு பாடசாலைகளுக்கு அருகில் உள்ள திருத்தம் செய்யப்பட வேண்டிய மற்றும் திருத்தி செப்பனிட வேண்டிய வீதிகளின் விவரங்களை கல்வி அமைச்சிற்கு வழங்குவதற்காக வீதி விவரங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது

இக் கோரிக்கைக்கு அமைவாக ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களும் தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு முன்னால் மற்றும் அருகிலுள்ள திருத்தம் செய்யப்பட வேண்டிய வீதிகளின் பெயர்களைத் தெரிவுசெய்து வழங்குமாறு தவிசாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரி1-159)

# தப்பிச்சென்ற கொரோனா நோயாளியால் மீண்டும் ஆபத்து

கொழும்பு, ஜூலை 25

ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து கொரோனா நோயாளி ஒருவர் தப்பிச்சென்றமையினால் மீண்டும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற இந்த நோயாளி சமூக மட்டத்தில் மக்களுடன் தொடர்புபட்டாரா என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த நோயாளி கொழும்பில் எந்தெந்த இடங்களுக்குப் பயணித்தார். அவர் எந்த நபர்களுடன் பழகினார் என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டு வருகின்றது. இந்த நபர் மக்களுடன் தொடர்புபட்டிருந்தால் அந்த நபர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த நோயாளி சமூகத்திற்குள் சுற்றித்திரிந்தமை ஆபத்தானதாகும். இந்நிலையில் கொரோனா அவதானம் சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ளது. அவர் சென்ற இடங்களை உடனடியாகக் கண்டுபிடித்து அவர் பழகியவர்கள் தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும். இந்த நோயாளியுடன் உரையாடியிருந்தால் உடனடியாக சுகாதாரப் பிரிவுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து நேற்று தப்பிச்சென்ற நிலையில் கைதுசெய்யப்பட்ட கொரோனா நோயாளி சென்ற இடங்கள் குறித்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணைக்காக சி.சி.ரி.வி காணொலிகளையும் திரட்டிவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். (ரி3)

# மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தேன்

### மனம் திறந்தார் தப்பித்த நோயாளி

கொழும்பு, ஜூலை 25

அங்கொட ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்ற கொரோனா நோயாளி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டார். இந்நிலையில் வைத்தியசாலையில் தப்பிச் சென்றமைக்கான காரணம் என்ன என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த அவர்,

யோசித்து யோசித்து மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தேன். அங்கு யாரும் இருக்கவில்லை. அதனால் தான் தப்பி வந்துவிட்டேன். அதிகாலை 4.30 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி, 9 மணியளவில் புறக்கோட்டைக்கு வந்துவிட்டேன். ஐ.டி.எச். இல் இருந்து வெல்லம்பிட்டிய ஊடாக புறக்கோட்டைக்கு நடந்தே வந்தேன். எந்தவொரு கடைகளிலும் உணவு உட்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு மறுமலர்ச்சிக் கடன்

கொழும்பு, ஜூலை 25

இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கொவிட்19 மறுமலர்ச்சிக் கடன்களை, சமுர்த்திப் பயனாளிகளில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற பயனாளிகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்19 தொற்றின் காரணமாக மோசமான தொழில் பாதிப்பை எதிர் கொண்டுள்ள சுயதொழிலில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு சௌபாக்கியா கொவிட்19 மறுமலர்ச்சிக் கடன்களை ஆண்டுக்கு 4 சதவீத வட்டியில் தொழில்படு மூலதனக்கடன்களாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் சமுர்த்தி திணைக்களத்தின் குறுநிதியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமுர்த்தி வங்கியில் சுயதொழில் முயற்சிக்காக ரூபா 250,000/ முதல். ரூபா 500,000/ வரை வாழ்வாதார அபிவிருத்திக் கடனைப் பெற்று செலுத்திக் கொண்டிருக்கும் சமுர்த்திப் பயனாளிகளில் கொவிட்19 தொற்றின் காரணமாக மோசமான தொழில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பயனாளிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தொழில்படு மூலதனக் கடன்களை ஆண்டுக்கு 4 சதவீத வட்டியில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இத் திட்டத்திற்காக கொவிட்19 தொற்றின் காரணமாக தொழில் பாதிப்புற்ற கடன்பெற்ற பயனாளிகளின் விபரங்களை கிராம அலுவலர் பிரிவுகளின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் திரட்டிவருகின்றனர் எனவும் சமுர்த்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ரி3-39)



ஒபர் நிறுவனத்தினால் கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்துக்கு ஏழு கை கழுவும் இயந்திர பொறிகள் வழங்கப்பட்டுள்ளன.

# வெல்லே சாரங்கவுடன் தொடர்புடைய இருவர் கைது

கொழும்பு, ஜூலை 25

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய வெல்லே சாரங்க என்ற நபருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்களை கொழும்பு முகத்துவாரம் பகுதியிலுள்ள மீன் சந்தைப் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி2)

சுதந்திரபுரம் மற்றும் உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர்கள் "தமிழர் அடையாளம்காக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக தமிழர் கலாசார உடையில் இன்று தமது கடமைக்கு வந்திருந்தனர். வெளிக்கள பணிக்குச் சென்றுகொண்டிருந்த அவர்களை மறித்து வினவியபோது தாம் மட்டுமல்ல ஏனைய கிராம அலுவலர்களும் இவ்வாறு கலாசார உடையில் கடமைக்குச் செல்ல ஆர்வமாக இருக்கிறார்கள் எனவும் எதிர்வரும் நாள்களில் அனைத்து கிராம உத்தி யோகத்தர்களும் தமிழர் பாரம்பரிய உடைகளிலேயே செல்வார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ரி3-222)



# இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை. 25

வாகன விபத்தில் சிக்கி காயமடைந்த ஒருவரும், தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த ஒருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்றைய தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவரும், மீசாலை வடக்கைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி2-9)

# பயணிகள் பஸ்ஸில் பற்றியது தீ

அம்பாறை, ஜூலை 25

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் கண்டி, தெல்தெனிய பகுதியில் திடீரென்று தீப்பற்றி எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதில் பயணித்த பயணிகள் அவசர அவசரமாக இறக்கப்பட்டு காயங்களின்றி காப்பாற்றப்பட்டனர். சம்பவம் நேற்று இரவு 7.45 அளவில் இடம்பெற்றுள்ளது. பொலிஸார் மற்றும் கண்டி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர். தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. தெல்தெனிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த)



பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பை கிளிநொச்சி மாவட்டத்தில் உத்தியோகபூர்வமாக அண்மையில் பதிவுசெய்து உறுதிப்படுத்திய சான்றிதழை, உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் அமைப்பின் தலைவர், செயலாளர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்த அமைப்பானது 2018ம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் எந்தவித இலாப நோக்கமும் இன்றி சேவையைச் செய்துவருகின்ற முன்மாதிரியான இளைஞர் அமைப்பு எனக் கூறப்படுகிறது. (ரி3)

# ரிஷாத், ரவிக்கு விடுத்த உத்தரவுகளில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 25

முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவி கருணா நாயக்க ஆகியோரை சி.ஐ.டியில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட உத்தரவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க ஆகியோர் சார்பில் கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னி லையில் முன்வைக்கப்பட்ட விடயங்கள், அவற்றுக்கு சட்ட மா அதிபர் சார்பில் முன்வைக் கப்பட்ட பதிலுரை என்பவற்றை ஆராய்ந்தே இந்த திருத்திய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.





முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதி யுதீனை எதிர்வரும் 27 ஆம் திகதி திங்களன்று சி.ஐ.டி.யின் விஷேட விசாரணைப் பிரிவு 3 ஆம் இலக்க விசாரணை அறை யில் ஆஜராகுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது. மன்னார் பகுதியில் தேர்தலில் போட்டியிலும் அவர், அங்கு கட்சியின் தலைவர் என்ற ரீதி யில் தேர்தல்கள் வேலையில் உள்ளதால், கொழும்புக்கு வந்து செல்ல சுமார் 16 மணி நேரங்கள் தேவைப்படும். எனவே தேர்தல் தொடர்பில் செயற்பட தடங்கல் ஏற்படுவதால் தேர்தலின் பின்ன ரான திகதி ஒன்றைத் ரிஷாத் பதியுதீன் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்த ரணி அனுஜ பிரேமரத்ன கோரி னார்.

இதுதொடர்பில் ஆராய்ந்த நீதிவான் ஏற்கனவே விடுத்த உத்தரவைத் திருத்தி சி.ஐ.டி. அதிகாரிகளுக்கு வவுனியா சி.ஐ.டி. அலுவலகத்துக்குச் சென்று ரிஷாத்திடம் வாக்கு மூலம் பெறவும், திங்களன்று வவுனியா சி.ஐ.டி. அலுவலகத் தில் விசாரணைகளுக்கு ஆஜரா வது போதுமானது எனவும் உத்தரவிட்டார்.

மத்திய வங்கியின் முறிகள் மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக் கவை விசாரணைகளுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி திங்க ளன்று சி.ஐ.டி.யில் ஆஜராக கோட்டை நீதிவான் நீதிமன்றம் விடுத்த உத்தரவும் நேற்றுத் திருத்தப்பட்டுள்ளது. ரவி கருணா நாயக்க ஐ.தே.க.வின் உப தலைவர் என்ற ரீதியில் பெரும் வேலைப்பளு உள்ளதால் தேர்தலின் பின்னரான திகதியை விசாரணைக்குத் தருமாறு ரவி கருணாநாயக்க சார்பில் கோரப் பட்டது. அதற்கு சட்டமா அதி பர் திணைக்களம் எதிர்ப்பு வெளி யிட்டது. இரு தரப்பு நியா யங்களை ஆராய்ந்த மன்று இரு தரப்புக்கும் பாதிப்பு இல்லாமல், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மைக்கு அமைய 27 ஆம் திகதி திங்களன்று நாலரை மணி நேரம் மட்டும் சி.ஐ.டி.யில் வாக்கு மூலம் வழங்க ரவி கருணாநாயக் கவுக்கு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. இதன்படி முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மட்டும் அவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்து கொள்ளப்படவுள்ளது. (ரி1)

## தேடப்பட்டு வந்த காவலர் சரணடைவு

கொழும்பு, ஜூலை 25

தேடப்பட்டு வந்த நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் சிறைக்காவ லர் காலிங்க கலுஅக்கல குற்றப்புல னாய்வுத் திணைக்களத்தில் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள காலிங்க உள்ளிட்ட மேலும் 3 பேரை கைதுசெய்யு மாறு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த 22 ஆம் திகதி பிடியாணை பிறப் பித்திருந்தது. இதனையடுத்து தேடப்பட்டு வந்த நிலையிலேயே முன்னாள் சிறைக் காவலர் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

## இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை நீக்கியது பிரிட்டன்



இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த பயண கட்டுப்பாடுகளை பிரிட்டன் நீக்கி யுள் ளது.

இதன்படி, ஜூலை 24 முதல், அத்தியாவ சியமற்ற அனைத்து சர்வதேச பயணங்க ளுக்கும் எதிரான ஆலோசனையிலிருந்து இலங்கைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள் ளது என்று பிரித்தானிய வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று அபாயங்களின் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படை யில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## 11 இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கு; விசாரணை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 25

கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன் னாகொட உட்பட 14 சந்தேகநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீண்டும் எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் திகதி விசா ரணைக்கு எடுக்குமாறு கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பா ஜானதி ராஜரத்ன, அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப் பித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதி களைச் சேர்ந்த 11 இளைஞர்கள் கப்பம் பெறும் நோக்கில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் கடற்படையின ருக்குத் தொடர்பு இருப்பது விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்தே சட்டமா அதிபர் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக் கலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப் பட்ட போதும், சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி ஜனக்க பண்டார, வழக்கு விசாரணைகளை இடை நிறுத்துமாறு கூறி மேன்முறையீட்டு நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதாக வும், அதற்கு எதிராக சட்டமா அதிபர் அதே நீதிமன்றத்தில் எதிர்ப்பு மனுவை தாக்கல் செய்துள்ளார் எனவும் கூறியுள்ளார். (ரி2)

## சிறுமி துஷ்பிரயோகம்; கொலையாளியை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் வேண்டுகோள்

புத்தளம், ஜூலை 25

புத்தளம் பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்ப டுத்தி கொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேகநபர் குறித்து தகவல் அறிந்தவர் கள் தமக்கு அறிவிக்குமாறு பொலி ஸார் பொதுமக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

சந்தேக நபர் கடந்த 15 ஆம் திகதி புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசிரிகம பகுதியில் வசிக்கும் 10 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கொலைசெய்தமை தொடர்பில் தேடப்பட்டு வருகிறார்.

ஆசிரிகம பகுதியைச் சேர்ந்த, லொக்கு முதியன்சலாகே சிம்யோன் எலோசி யஸ் என்பவரே இவ்வாறு தேடப் படுகின்றார்.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர் கள், 119 என்ற அவசர இலக்கம் மற்றும் 071- 8591292, 032- 2265222, 032 226 5422 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி தெரிவிக்குமாறு பொலி ஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (ரி2)



## மன்னாரில் மேட்டுநிலப்பயிர் அறுவடை ஆரம்பம்

மன்னார், ஜூலை 25

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறுபோக பயிர்ச் செய்கையூடாக மேட்டுநிலப்பயிர்ச் செய்கை களை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுதானியப் பயிர்களான பயறு, கௌப்பி, நிலக்க டலை போன்றவை அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

அறுவடைப் பணிகளில் அதிகளவான பெண்கள் ஈடு பட்டு சிறு வருமானங்களை ஈட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1-213)

## பணத்தைத் திருட முயன்ற பொலிஸார் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 25

பெண் ஒருவரின் பயணப் பையிலிருந்த பணத்தைத் திருடுவதற்கு முயன்றார் என்னும் குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மொரட்டுவையில் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட வர் மிரிஹான பொலிஸ் பிரிவிலுள்ள பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளாவார். நேற்றுக் காலை காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் பயணித்த பெண் ஒரு வரின் பயணப் பையிலிருந்த பணத்தையே கான்ஸ்டபிள் திருட முயன்றுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ரி2)

# அரசின் கொரோனாக் கட்டுப்படுத்தலின் சகல வேலைத்திட்டங்களும் வெற்றி

## மெய்ச்சுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 25

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களும் வெற்றியளித்துள்ளன என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



கொரோனா அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது. அரசின் அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது வெற்றியளித்துள்ளன.

இதேவேளை அயல் நாடுகளிலிருந்து எவரும், கடல் வழி ஊடாக இலங்கைக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. மாறாக அவ்வாறு வருவோரைத் தடுப்பதற்கு, கடற்படையும் இராணுவமும் இணைந்து விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன-என்றார்.(ரி2)

---

## சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

கொழும்பு, ஜூலை 25

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணத்தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2020 ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை இணையம் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணப்பங்களை www.doenets.lk இணையம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (ரி1)

---

## சிறைச்சாலையில் ஒருவர் உயிரிழப்பு

நீர்கொழும்பு, ஜூலை 25

நீர்கொழும்புச் சிறைச்சாலையிலிருந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பகுதியிலுள்ள நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்த நபர், கடந்த சில தினங்களாக சுகயீனமான நிலையில் காணப்பட்டமையை அடுத்தே தற்போது உயிரிழந்துள்ளார். (ரி2)

---

## சிப்பாயுடன் மோதல்: ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 25

இராணுவச் சிப்பாய் ஒருவருடன் ஏற்பட்ட மோதலில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் இங்கிரிய பகுதியைச் சேர்ந்த நபர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரி1)

---

ஐ.டி.எச்.இலிருந்து தப்பிச் சென்ற

## கொரோனாத் தொற்றாளரால் கொழும்புக்கு ஆபத்து இல்லை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

முல்லேரியா ஐ.டி.எச். வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்று மீண்டும் பிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர் மூலம் கொழும்புக்கு ஆபத்து இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த எல். ஷியாம் நஸீம் என்பவர், நேற்று அதிகாலை 2 மணியளவில் வைத்தியசாலையில் சேவையிலிருந்த தாதியர்களுக்குத் தெரியாமல், ஜன்னலூடாக வெளியேறி வைத்தியசாலையின் மதில் மீது ஏறிப் பாய்ந்து தப்பித்துள்ளார்.

சிறிது தூரம் பயணித்து முச்சக்கர வண்டியொன்றின் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இவர் தப்பிச்சென்ற செய்தி மற்றும் அவரது புகைப்படம் தொடர்பில் தேசிய வைத்தியசாலையில் சேவையிலிருந்த இரண்டு ஊழியர்களும் அறிந்திருந்ததால் நோயாளி வைத்தியசாலையின் கதவின் ஊடாக உள்நுழையும் போதே அவரிடம் சென்று நீங்கள்தானே வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவர் என இரண்டு ஊழியர்களும் வினவியுள்ளனர்.

அவர் ஆம் என பதிலளிக்க உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நோயாளிக்கு உரிய பாதுகாப்புடன் சிகிச்சையளிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

விரைந்து செயற்பட்டு பெரும் ஆபத்து ஏற்படுவதைத் தடுத்த இவர்கள் இருவர் உட்பட உடனடியாக செயற்பட்ட சேவையாளர் குழாமுக்கு வெகுமதிகளை அளிக்க பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது - என்றார். (ரி2)

---

## செயலிழந்த படகை கரைக்கு கொண்டுவர கடற்படை நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 25

தெற்கு கடல் பிராந்தியத்திலிருந்து கென்ய நாட்டுப் படகு ஒன்றை கரைக்குக் கொண்டுவருவதற்கு கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தப் படகு இலங்கைக்கு தென் பகுதியில் சுமார் 170 கடல் மைல் தொலைவில் பல நாள்களாக செயலிழந்த நிலையில் உள்ளது.

கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி தென்கொரியாவின் புசான் துறைமுகத்தில் இருந்து 13 பணிக்குழாமினருடன் கென்யாவின் மொம்பாசா துறைமுகத்தை நோக்கி பயணத்தை மேற்கொண்ட நிலையில் படகு செயலிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

---

## உர மானிய பதிவு நாளை

கைதடி, ஜூலை 25

கைதடி நுணாவில் விவசாய சம்மேளனத்தின் உரமானியப் பதிவு நாளை ஞாயிறு காலை 7 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை சம்மேளனத் தலைவர் சி.லோகதாஸ் இல்லத்தில் இடம்பெறவுள்ளது என்று சம்மேளனம் அறிவித்துள்ளது.

பதிவுக்காக வருபவர்கள் ஏக்கர் வரிப் பற்றுச் சீட்டையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலதிக விவரங்களுக்கு 0766560812 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

---



## ஹபாயா, புர்கா அணிந்து ஆண்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 25

குவாஸி நீதிமன்ற முறைமையைக் கலைத்து விடுமாறும், புர்கா அணியும் பிரச்சினைக்கு தீர்வைக் காணுமாறும் கோரி, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நாட்டுக்கு விசுவாசமுள்ள குடிமக்கள் எனும் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள் முஸ்லிம் பெண்கள் அணியும் ஹபாயா மற்றும் புர்கா ஆடைகளை அணிந்திருந்தனர்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்','சிறுவர் திருமணம் என்பது, சிறுவர் துஷ்பிரயோகம்' என்பவை உள்ளிட்ட சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். (ரி1)

## புதினம்? தெரியுமோ

கிட்டடியில தன்னைச் சந்திச்ச ஊடகக்காரர் ஒருத்தரிட்ட ஒரு விசயத்தைச் சொல்லியிருக்கிறார்.

சைக்கிள்காரர் சுரேஷை காய் வெட்டிவிட்டிட்டு வந்தாத்தான் நாங்கள் உங்களோட கூட்டணிக்கு வருவம் எண்டு சொல்லியும், நீதியரசர் ஏன் அவரை (சுரேஷை) கைவிடேலை எண்டு தெரியுமா? சுரேஷ் உணர்ச்சிவசமாக பேசக்கூடிய ஆள். அப்பிடி உணர்ச்சிப் பிழம்பா கதைச்சாத்தான் சனம் எடுபடும் எண்டது முதலமைச்சரின்ர கணிப்பு. அப்பிடியான ஆக்கள் தன்ர பக்கம் இல்லாததால தான் , சைக்கிள்காரர் வராட்டியும் பரவாயில்லை சுரேஷ் இருந்தால் அவற்றை பேச்சை வைச்சு வாக்கை அள்ளலாம் எண்டு நினைச்சார். இப்பிடியெல்லாம் யோசிக்கிற ஆளோட எப்பிடி சேர்ந்து வேலை செய்யமுடியும்? சூழலியல்காரர் சொன்னது உண்மையா, பொய்யா? எல்லாம் விக்கியருக்கே வெளிச்சம்.

# சம்பந்தனின்...

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

'சமஷ்டியைக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு. தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்படவில்லை. அவர்களின் பின்னால் சர்வதேசம் நிற்கின்றது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழர்களை முட்டாளாக்கும் சம்பந்தன், சிங்களவர்களையும் முட்டாளாக்கலாம் என்று நினைக்கின்றார். சம்பந்தனின் வாய்ச்சவடால் தமிழர்கள் மத்தியில்தான் எடுபடும். அது சிங்களவர்கள் மத்தியில் எடுபடவே மாட்டாது.

அரசியல் தீர்வு கிடைக்க ஆணை தாருங்கள் என்று கூறி தமிழ் மக்களை அன்று தொடக்கம் ஏமாற்றி வாக்குகள் சேகரித்து வரும் சம்பந்தன் தரப்பினர், இன்று சர்வதேசம் தமது பக்கம் என்று கூறி சிங்களவர்களை மிரட்டப் பார்க்கின்றார். இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சவேமாட்டோம்.

சம்பந்தனின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி.தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கச்சொல்லி எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே முடியாது.

புதிய ஆட்சியில் அரசு வழங்கும் பொதுவான தீர்வு நாட்டிலுள்ள சகலருக்கும் உரியதாகவே இருக்கும்" என்றார். (அ,22)

# குட்டிமணி, தங்கத்துரைக்கு...




தங்கத்துரை,ஜெகன் ஆகியோரது உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி,மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் உபதலைவர் ஹென்றி மகேந்திரன், துணை மாவட்ட அமைப்பாளர் நாகராயன், பிரதேசசபை உறுப்பினர்களான பூ. சந்திரபத்மன்,கார்த்தி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.(அ,110)

# புதிய ஆட்சியிலேயே....

கூட்டம் இடம்பெறாது என அறியமுடிகின்றது.

கடந்தவாரம் நடைபெற்ற கூட்டமே இந்த ஆட்சியின்கீழ் நடைபெற்ற கடைசி அமைச்சரவைக் கூட்டம் என்றும், 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதால் அன்றைய தினமும் அமைச்சரவை கூடாது என தெரியவருகின்றது.

எனவே, பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் கட்சி புதிய அரசாங்கமொன்றை நிறுவி, அமைச்சரவையை நியமித்த பின்னரே இனி அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-44)

# ஏறியது...

25 நாள்களும் இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லூர்த் திருவிழாவின் போது எவ்வித வணிகக் கடைகளும் அமைக்க அனுமதி வழங்கப்படாததால், ஆலயச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்கு அப்பாலேயே கச்சான் கடைகள் அமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. (அ,ஐ)





# யாழ்.– கொழும்பு...

“ கொழும்பு- யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அனுராதபுரத்திலிருந்து வவுனியா செல்லும் பாதை பல தசாப்தங்களாக மேம்படுத்தப்படவில்லை. எனவே அதனை அடுத்த ஆண்டு நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அனுராதபுரம்வவுனியா ரயில் பாதை அடுத்த ஆண்டு பல மாதங்களுக்கு மூடப்பட வேண்டியிருக்கும் என்று திட்டத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரயில் பாதையை மேம்படுத்த 166,000 தொன் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.(அ)

# பாதுகாப்பு...

நேற்று அதிகாலை தப்பிச்சென்ற நிலையில் இந்த நபர் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து, வைத்தியசாலைகளில் இருந்து நோயாளர்கள் தன்னிச்சையாக வெளியேறும் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)




# கைதிகளையும்....

துள்ளார்.

“ஜனநாயக நாடொன்றில் பிரஜைகளுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுப்பது நியாயமில்லை. சிறையில் சாதாரணமாக தடுத்துவைக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளல்லர். அவர்கள் நீதிமன்ற விசாரணைகளுக்காகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

சிறையில் இருப்பவர்கள் எல்லோரையும் நாம் தண்டனை பெற்றவர்களாகவோ, குற்றவாளிகளாகவோ கருதமுடியாது. அதனை நீதிமன்றமே தீர்மானிக்க முடியும். நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை அவர்கள் சாதாரண தடுப்புக் கைதிகள் தான். அவர்களைக் குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்த முடியாது. ஆதலால், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படலாகாது. சிறையிலிருக்கும் விசாரணைக் கைதியொருவரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக நிற்கிறார். அதே நேரத்தில், அதே சிறையில் அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதனை தேர்தல் ஆணையாளர் கவனத்தில்கொள்ள வேண்டும் ” என்றும் அவர் தெரிவித்தார். (அ)








# அமெரிக்கப் போர் விமானத்தால் பயணிகள் விமானத்துக்கு அச்சுறுத்தல்

### கடும் கண்டனம் வெளியிட்டது ஈரான்

தெஹ்ரான், ஜூலை 25

ஈரானிலிருந்து புறப்பட்டு புறப்பட்ட பயணிகள் விமானத்தை சிரியா எல்லையில் அமெரிக்கப் போர் விமானம் அச்சுறுத்தியமைக்கு ஈரான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஈரான் நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் இருந்து நேற்று முன்தினம் துருக்கி பெய்ரூட்டிற்கு மஹன் பயணிகள் விமானம் சென்று கொண்டிருந்தது. சிரியா எல்லையில் திடீரென அமெரிக்க போர் விமானம் மிக அருகில் இடைமறிப்பது போன்று வந்தது.

நொடிப்பொழுதில் சுதாரித்துக் கொண்ட விமானி விமானத்தின் உயரத்தை சட்டென்று குறைத்தார். இதனால் சில விமானப் பயணிகள் காயம் அடைந்தனர். பின்னர் விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியது.

இதனிடையே, போர் விமானம் அருகில் சென்றது உண்மைதான். ஆனால் 1000 மீற்றர் இடைவெளி இருந்தது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஆனால் 100 மீற்றர் இடைவெளி மட்டுமே இருந்தது என ஈரான் தெரிவித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்கா விமானம் அருகில் பறந்தது சட்டவிரோதம் என்று ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.

## சிலிக்கன் முகக் கவசம்

அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் விஞ்ஞான தொழில்நுட்ப்பிரிவு புதிய வகையிலான முகக் கவசம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இது என்95 முகக் கவசத்துக்கு நிகரானது. சிலிக்கனினால் உருவாக்கப்பட்ட இந்த முகக் கவசம் மீளவும் பாவிக்கக் கூடியது. மேலும் இது தொற்று நீக்கக் கூடியது எனவும் இதனை அணிவதற்கு மிக எளிதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் இதன் விலை 15 டொலர் கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## கொரோனா தடுப்பூசி அடுத்த ஆண்டு பாவனைக்கு!




ஜெனிவா, ஜூலை 25

கொரோனாத் தடுப்பூசி பயன்பாட்டை அடுத்தவருடம் அளவில் எதிர்பார்க்கமுடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. சர்வதேசத்தை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸுக்கு எதிராக பல்வேறு நாடுகளும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் தடுப்பூசி தயாரிப்பு நடவடிக்கைகள் முன்னேற்றம் அடைந்துள்ளன என்று உலக சுகாதார அமைப்பின் அவசரகால திட்டத்தின் தலைவர் மைக்ரியான் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தைச் சாராமல் தேவையை பொறுத்து தடுப்பூசி விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறெனினும் தடுப்பூசி நடைமுறைக்கு வரும்வரை வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ரி1)



## விஜய் சேதுபதிக்கு ஜோடியாகும் அனுஷ்கா?

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் விஜய் சேதுபதி. இவர் கைவசம் மாஸ்டர், மாமனிதன், கடைசி விவசாயி, யாதும் ஊரே யாவரும் கேளிர், லாபம், துக்ளக் தர்பார் போன்ற படங்கள் உள்ளன. இதுதவிர கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் பயோபிக்கிலும் நடிக்கிறார். மேலும் தேவர்மகன் படத்தின் 2ஆம் பாகமாக உருவாகும் 'தலைவன் இருக்கின்றான்' படத்தில் விஜய்சேதுபதி கமலுக்கு வில்லனாக நடிக்க உள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், நடிகர் விஜய் சேதுபதியின் புதிய படம் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி இப்படத்தை விஜய் இயக்க உள்ளார் என்று கூறப்படுகிறது. மேலும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக முதல்முறையாக அனுஷ்கா நடிக்க உள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாக உள்ளது எனவும் கூறப்படுகிறது.

## 2022 லேயே அவதார் – 2



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவதார் 2ம் பாகத்தின் வெளியீட்டு திகதி மாற்றப்பட்டு உள்ளதாக இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன் அறிவித்துள்ளார்.

அவதார் 2ஆம் பாகம் 2022ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதியும், அவதார் 3ம் பாகம் 2024ம் ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதியும், அவதார் 4ஆம் பாகம் 2026ஆம் ஆண்டு டிசெம்பர் 18ஆம் திகதியும், அவதார் 5ஆம் பாகம் 2028ஆம் ஆண்டு டிசெம்பர் 22ஆம் திகதியும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் 2009இல் திரைக்கு வந்த அவதார் படம் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. சுமார் ரூ.25 ஆயிரம் கோடி வசூலித்து உலக அளவில் அதிகம் வசூல் ஈட்டிய படம் என்ற சாதனையையும் நிகழ்த்தியது. இந்தச் சாதனையை கடந்த வருடம் வெளியான அவெஞ்சர்ஸ் எண்ட் கேம் முறியடித்தது குறிப்பிடத்தக்கது.

அவதார் படத்தில் இடம்பெற்ற கற்பனை உலகமும் கிராபிக்ஸ் தொழில்நுட்பங்களும் ரசிகர்களை வியக்க வைத்தன. அடுத்து இந்த படத்தின் 4 பாகங்கள் ரூ.7,500 கோடி செலவில் தயாராக உள்ளன. 2 மற்றும் 3ம் பாகங்களுக்கான படப்பிடிப்புகள் நியூசிலாந்தில் தொடர்ந்து நடைபெற்று வந்தன. கொரோனா பரவலைத் தடுக்க நியூசிலாந்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால் கடந்த மார்ச் மாதம் அவதார் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு படக்குழுவினர் வெளியேறினார்கள்.

பின்னர் கொரோனா பரவல் நியூசிலாந்தில் குறைந்ததால், கடந்த ஜூன் மாதம் மீண்டும் படப்பிடிப்பை தொடங்கினர். இருப்பினும் அவதார் படத்தை திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிட முடியாது என இயக்குனர் ஜேம்ஸ் கேமரூன் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக ஜேம்ஸ் கேமரூன் கூறியதாவது: "கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவதார் அடுத்த பாகத்தின் படப்பிடிப்பை குறித்த நேரத்தில் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது நியூசிலாந்தில் படப்பிடிப்பு நடத்தி வருகிறோம். கொரோனாவுக்கு முன்பு வரை டிசம்பர் 2021ல் வெளியிட்டுவிடலாம் எனத் திட்டமிட்டு இருந்தோம். தற்போதைய தாமதங்களால் படத்தின் வெளியீடு தள்ளிவைக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

# திறமையான கிரிக்கெட் வீரர்கள் பலர் மலையகத்தில் சாதிக்க காத்திருக்கின்றனர்

## ஊடகங்களுக்கு முத்தையா முரளிதரன் கருத்து

கொழும்பு, ஜுலை 25

மலையகத்திலுள்ள இளைஞர்களுக்கு கிரிக்கெட்டில் சாதிப்பதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அக்கரப்பத்தனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து நான் ஓய்வுபெற்று நேற்றுடன் 10 வருடங்கள் ஆகின்றன. மலையகத்தில் கிரிக்கெட் தொடர்பில் திறமையுள்ள வீரர்கள் பலர் இருக்கின்றனர். எனினும்,



உரிய இடத்துக்கு அவர்கள் வருவதற்கான அடிப்படை வசதிகள் இல்லை.

எமது பவுண்டேசனுக்கு உதவி செய்யும் ஒருவர் லிந்துலையில் இருக்கின்றார். லிந்துலை பகுதியில் மைதானமொன்று இருக்கின்றது, அதனை இலவசமாகத் தருகின்றேன், விளையாட்டு நிறுவனமொன்றை அமைக்குமாறு அவர் கூறினார்.

அந்தக் கோரிக்கையை நானும் ஏற்பேன். எனவே, அத்திவாரத்தை போட்டுக்கொடுத்தால், விளையாட்டு வீரர்களுக்கு திறமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

அடிப்படை வசதிகள் இன்மையாலேயே இங்குள்ளவர்களுக்கு திறமையை வெளிப்படுத்தமுடியாதுள்ளது. கிரிக்கெட் என்பது ஓட்டப்போட்டி போன்றது கிடையாது. மைதானத்தில் உரிய பயிற்சி பெறவேண்டும். ஆனால், அடிப்படைவசதிகள் கூட இங்கு இல்லை. அதனை ஏற்படுத்திக்கொடுப்பதே எமது நோக்கமாக இருக்கின்றது.

அதேவேளை, இலங்கை கிரிக்கெட் அணியில் 10, 15 வருடங்கள் விளையாடிய வீரர்கள் ஓய்வுபெற்று விட்டனர். புதிய வீரர்களுக்கு திறமை இருக்கின்றது. அதனை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு சிறிது காலம் எடுக்கும்.

அதனை நாமும் வழங்கவேண்டும். ஒரே நாளில் சம்பியனாக முடியாது. எனவே, எதிர்காலத்தில் திறமையை வெளிப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்என்றார்.(ரி2)



# ஐ.பி.எல். எமிரேட்ஸில்!

ரியாத், ஜுலை 25

வழக்கமாக மார்ச் மாதம் நடைபெறும் ஐ.பி.எல் தொடரானது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஐபிஎல் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் செப்ரெம்பர் 19ஆம் திகதி தொடங்கி நவம்பர் 8 ஆம் திகதி வரை 51 நாள்கள் போட்டி நடை பெற உள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் ஐக்கிய அரபு அமீரகத்தில் கொரோனா தொற்று ஓரளவிற்கு கட்டுக்குள் வந்துள்ளதால், போட்டியை எங்கள் நாட்டில் நடத்தலாம் என அந்நாட்டு அரசு விருப்பம் தெரிவித்தது. மேலும் ஐ.பி.எல். போட்டியை இலங்கையில் நடத்த இலங்கை அரசும் விருப்பம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தற்போது ஐ.பி.எல். நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, இந்த ஆண்டிற்கான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துபாய், அபுதாபி, ஷார்ஜா நகரங்களில் போட்டிகளை நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் போட்டி அட்டவணை குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஐ.பி.எல். போட்டிகள் செப்ரெம்பர் 19 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 8 ஆம் திகதி முடிவடையும் என பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இறுதி விவரங்கள் குறித்து ஆலோசிப்பதற்கும், அட்டவணையை அங்கீகரிப்பதற்கும் ஐ.பி.எல் ஆட்சிக் குழு அடுத்த வாரம் கூடவுள்ளது. (ரி2)

# ஒலிம்பிக் குறித்து இந்திய ஹொக்கி அணிகளின் கப்டன்கள் நம்பிக்கை

புதுடில்லி, ஜுலை 25

டோக்கியோவில் இந்த ஆண்டு நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டி ஓர் ஆண்டு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஒலிம்பிக் 2021 ஆம் ஆண்டு ஜுலை 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை அரங்கேறவுள்ள நிலையில் ஒலிம்பிக் போட்டிக்கான ஒரு வருட கவுண்டவுன் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதையொட்டி இந்திய ஆண்கள் ஹொக்கி அணியின் தலைவன் மன்பிரீத் சிங், இந்திய பெண்கள் ஹொக்கி அணியின் தலைவி ராணி ராம்பால் ஆகியோர்

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணிகள் பதக்க மேடையை அலங்கரிக்க பிரகாசமான வாய்ப்பு இருப்பதாக கூறினார்கள்.

மன்பீரித் சிங் கூறுகையில், கடந்த ஆண்டில் எங்கள் அணி செயல்பட்ட விதத்தை பார்க்கும் போது டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல நிச்சயமாக நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஓர் அணியாக நாங்கள் நல்ல வளர்ச்சியை எட்ட போதிய காலஅவகாசம் இருக்கிறது. நாங்கள் செய்ய வேண்டிய பணிகளை சரியாக செய்வதில் கவனம் செலுத்தினால் முடிவுகள் தானாகவே நல்லபடியாக அமையும்.

பெண்கள் அணியின் தல[illegible] ராணி ராம்பால் தெரிவிக்கையில், சமீப காலங்களில் முன்னணி அணிகளுக்கு எதிரான போட்டிகளில் விளையாடுகையில் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்று நாட்டுக்கு பெருமை சேர்க்கும் திறன் எங்கள் அணிக்கு இருக்கிறது என்பதை காட்டி இருக்கிறோம். நம்முடைய அணி விளையாடிய ஒவ்வொரு போட்டிகளிலும் ஏற்றம் கண்டு வருகிறது. அடுத்த ஓர் ஆண்டில் நமது ஆட்டத்தில் நிச்சயம் மேலும் மேம்பாடு அடைவோம். 36 ஆண்டுகளுக்கு பிறகு தகுதி பெற்று சரித்திரம் படைத்த ரியோ ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் அங்கம் வகித்ததை சிறப்பு வாய்ந்ததாக கருதுகிறேன். அந்த போட்டியில் நாங்கள் சிறந்த முடிவை பதிவு செய்யாவிட்டாலும், அந்த ஒலிம்பிக்கில் இருந்து நான் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி யில் விளையாடிய வீராங்கனைகள் அனைவரும் அந்த அனுபவத்தின் அடிப்படையில் டோக்கியோ ஒலிம்பிக் களத்தில் சாதுரியமாக செயல்பட்டு அசத்துவார்கள் என நம்புகிறேன் - என்றார். (ரி2)



# அம்மாவை சமாதானம் செய்ய முடியுமா?

## கப்டன் கோலி ருசிகரம்

உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் இந்திய கப்டன் கோலிக்கு நிகர் அவரே தான். ஜிம்மில் நீண்ட நேரம் பயிற்சி செய்வது வழக்கம். இதனால் உடல்நிலை பலவீனமாகி வருவதாக, அவரது அம்மா சரோஜ் கவலைப்படுவாராம்.

இது குறித்து கோலி கூறியது:

பொதுவாக அம்மாவுக்கு பிள்ளைகள் மீது அக்கறை அதிகம். குழந்தை கொழு கொழு என இல்லை என்றால் ஏதோ பிரச்சினை அல்லது பலவீனமாக இருப்பதாகக் கூறுவார். நான் மிகவும் மெலிந்து இருப்பதாக அம்மா அடிக்கடி கூறுவார். நாம் விளையாடும் போட்டிக்காக உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டிய அவசியம் அம்மாக்களுக்கு புரியாது. அவர்களுக்கு பிள்ளையின் உடல்நிலை தான் முக்கியம்.

என் அம்மாவிடம் நான் பலவீனமாக இல்லை என ஒவ்வொரு நாளும் கூறுவேன். கிரிக்கெட் போட்டிக்காக தான் பயிற்சி செய்வதாக விளக்குவேன். ஆனாலும் அவர்களை சமாதானம் செய்வது மிகவும் கடினம். சத்தான உணவு, முறையான பயிற்சி எனத் திட்டமிட்டு வாழ்கிறேன். இருப்பினும் காலையில் எழுந்தவுடன் நீ பலவீனமாக இருக்கிறாய் என அம்மா சொல்வார். இதை கேட்கும் போது சில நேரங்களில் வேடிக்கை யாகவும், சில நேரங்களில் எரிச்ச லாகவும் இருக்கும் என கோலி கூறினார்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 25.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.